செய்தி வெளியீடு எண்: 23 நாள்: 15.02.2018

**தேனி மாவட்டம்,**
**மேல்நிலை இரண்டாம் ஆண்டு, முதலாம் ஆண்டு மற்றும்**
**எஸ்.எஸ்.எல்.சி. பொதுத்தேர்வு நடத்துவதற்கான**
**முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம்**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது:-**

********

தேனி மாவட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில் மேல்நிலை இரண்டாம் ஆண்டு, முதலாம் ஆண்டு மற்றும் எஸ்.எஸ்.எல்.சி. பொதுத்தேர்வு நடத்துவதற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

ஆய்வுக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவிக்கையில், அரசு பொதுத்தேர்வான 10,11,12-ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வுகள் நடத்திட மாவட்ட ஆட்சித்தலைவரை தலைவராகவும், முதன்மைக்கல்வி அலுவலரை துணைத்தலைவராகவும், மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்டாட்சியர் (பெரியகுளம்), வருவாய் கோட்டாட்சியர் (உத்தமபாளையம்), தமிழ்நாடு மின்சார வாரிய செயற்பொறியாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழக கிளை மேலாளர், துணைக்காவல் கண்காணிப்பாளர்கள், மாவட்ட கல்வி அலுவலர்கள் ஆகியோர் உறுப்பினர்களாக கொண்ட குழு அமைக்கப்பட்டுள்ளது.

அரசு பொதுத்தேர்வான பனிரெண்டாம் வகுப்பு பொதுத்தேர்வுகள் மார்ச் 1 முதல் ஏப்ரல் 6-ம் தேதி வரை நடைபெறவுள்ளதையொட்டி, பெரியகுளம் கல்வி மாவட்டத்தில், 68 பள்ளிகளுக்கு 27 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு 3934 மாணவர்களும், 4078 மாணவிகளும் என 8012 மாணவ, மாணவிகள் தேர்வு எழுத உள்ளனர். உத்தமபாளையம் கல்வி மாவட்டத்தில், 60 பள்ளிகளுக்கு 23 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு 3678 மாணவர்களும், 3230 மாணவிகளும் என 6908 மாணவ, மாணவிகள் தேர்வு எழுத உள்ளனர். என மாவட்டத்தில் 128 பள்ளிகளுக்கு 4 வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்கள் (Custodian Points) ஏற்படுத்தப்பட்டு 50 இடங்களில் தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு 7612 மாணவர்களும், 7308 மாணவிகள் என 14920 மாணவ, மாணவிகள் தேர்வு எழுத உள்ளனர்.

மேல்நிலை முதலாம் ஆண்டு பொதுத்தேர்வுகள் மார்ச் 7 முதல் ஏப்ரல் 16 வரை நடைபெறவுள்ளதையொட்டி, பெரியகுளம் கல்வி மாவட்டத்தில், 72 பள்ளிகளுக்கு 27 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு 4185 மாணவர்களும், 4105 மாணவிகளும் என 8290 மாணவ, மாணவிகள் தேர்வு எழுத உள்ளனர். உத்தமபாளையம் கல்வி மாவட்டத்தில், 64 பள்ளிகளுக்கு 23 தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு 3626 மாணவர்களும், 3044 மாணவிகளும் என 6670 மாணவ, மாணவிகள் தேர்வு எழுத உள்ளனர். என மாவட்டத்தில் 136 பள்ளிகளுக்கு 4 வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்கள் (Custodian Points) ஏற்படுத்தப்பட்டு 50 இடங்களில் தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு 7811 மாணவர்களும், 7149 மாணவிகளும் என 14960 மாணவ, மாணவிகள் தேர்வு எழுத உள்ளனர்.

பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வுகள் மார்ச் 16 முதல் ஏப்ரல் 20 வரை நடைபெறவுள்ளதையொட்டி, பெரியகுளம் கல்வி மாவட்டத்தில், 104 பள்ளிகளுக்கு 35 இடங்களில் தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு 4407 மாணவர்களும், 4258 மாணவிகளும் என 8665 மாணவ, மாணவிகள் தேர்வு எழுத உள்ளனர். உத்தமபாளையம் கல்வி மாவட்டத்தில், 94 பள்ளிகளுக்கு 32 இடங்களில் தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு 4167 மாணவர்களும், 3409 மாணவிகளும் என 7576 மாணவ, மாணவிகள் தேர்வு எழுத உள்ளனர். என மாவட்டத்தில் 198 பள்ளிகளுக்கு 8 வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்கள் (Custodian Points) ஏற்படுத்தப்பட்டு 67 இடங்களில் தேர்வு மையங்கள் அமைக்கப்பட்டு 8574 மாணவர்களும், 7667 மாணவிகளும் என 16241 மாணவ, மாணவிகள் தேர்வு எழுத உள்ளனர்.

வினாத்தாள் கட்டுக்காப்பு மையங்களுக்கு வினாத்தாள் மந்தன கட்டுக்கள் வைக்கப்பட்ட நாள் முதல் தேர்வுகள் முடியும் வரையும், விடைத்தாள் சேகரிப்பு மையத்தில் விடைத்தாள் வைக்கப்பட்ட நாள் முதல் 24 மணி நேரமும் ஆயுதம் தாங்கிய காவலர் பணியில் ஈடுபடுத்திடவும், தேர்வு நடைபெறும் நாட்களில் காலை 08.00 மணி முதல் 02.00 மணி வரை தேர்வு நடைபெறும் மையங்களுக்கு பாதுகாப்பு பணியில் காவலரை ஈடுபடுத்திடவும், வினாத்தாள் கட்டுக்கோப்பு மையங்களிலிருந்து தேர்வு மையங்களுக்கு வினாத்தாள் மந்தனக்கட்டுக்களை கொண்டு செல்லும் வாகனத்திற்கும், விடைத்தாட்களை தேர்வு மையங்களிலிருந்து விடைத்தாள் சேகரிப்பு மையத்திற்கு கொண்டு செல்லும் வாகனத்திற்கும், பாதுகாப்பு அளித்திடவும், தேர்வு நடைபெறும் நாட்களில் தேர்வு மையங்களுக்கு காலை 09.00 மணிமுதல் பிற்பகல் 03.00 மணி வரை தடையில்லா மின்சாரம் வழங்கிடவும், பேருந்து வசதியில்லா கிராமங்களிலிருந்து தேர்வு எழுதும் மாணவர்களின் நலன் கருதி போக்குவரத்து வசதி ஏற்படுத்திடவும், தேர்வினை கண்காணித்திட தேவையான பறக்கும் படை (Flying Squad) நகரும் படையினரை (Mobile Team) ஏற்படுத்திடவும், தேர்வுகள் இடையூறுமின்றி நடைபெற சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு ஆலோசனைகள் மற்றும் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.ந.வெங்கடாசலம், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

ஆலோசனைக்கூட்டத்தில், முதன்மைக்கல்வி அலுவலர் திருமதி அ.வசந்தி அவர்கள், கூடுதல் காவல் கண்காணிப்பாளர் திரு.பழனிகுமார் அவர்கள், பெரியகுளம் வருவாய் கோட்டாட்சியர் (பொ) திரு.கார்த்திகேயன் அவர்கள், உத்தமபாளையம் வருவாய் கோட்டாட்சியர் திரு.சொர்ணப்பன் அவர்கள், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.ச.தங்கவேல் அவர்கள், மாவட்ட கல்வி அலுவலர் (பெரியகுளம்) திரு.வீ.செல்வம் அவர்கள், மாவட்ட கல்வி அலுவலர் (உத்தமபாளையம்) திருமதி சா.ராஜேஸ்வரி அவர்கள், உட்பட கல்வித்துறை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தேனி.**